

# அருள்மிகு பாகம்பிரியாள் உடனுறை சங்கரராமேசுவரர் திருக்கோயில்

## தூத்துக்குடி

| | |
|---|---|
| இறைவன் | அருள்மிகு சங்கரராமேசுவரர் |
| இறைவி | அருள்தரும் பாகம்பிரியாள் |
| தீர்த்தம் | வாஞ்சா புஷ்கரணி |
| தலவிருட்சம் | வில்வமரம் |
| ஆகமம் | காமிக ஆகமம் |

**தல வரலாறு :**

திருச்செந்தூரில் சூரசம்காரம் முடிந்தவுடன் இந்திரன் தனது மகளாகிய தெய்வானையை முருகனுக்கு திருமணம் செய்து வைக்கிறார். திருமணம் திருப்பரங்குன்றத்தில் நடக்கிறது. கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் தெய்வானை திருமணப்

தொடர்பு முகவரி

செயல் அலுவலர், அருள்மிகு சங்கரராமேசுவரர் திருக்கோயில்
தூத்துக்குடி நகர். தொலைபேசி எண் : 0461 - 2320 680
மின்னஞ்சல் : bahampiriyalsankar@gmail.com

படலத்தில் விரிவாக இதனை விளக்குகிறார். சிவனும், பார்வதியும் தங்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய மணமக்களை மார்புறத் தழுவி வாழ்த்துகின்றனர்.

முருகப்பெருமானின் திருமணத்தைக் கண்டு களிக்க வந்த சிவபெருமானும், பார்வதிதேவியும் சோலை சூழ்ந்த இவ்வூருக்கு எழுந்தருளி தங்குகின்றனர். அவ்வமயம் உமையாள் சிவ பெருமானிடம் வேதங்களின் விழுப் பொருளாகிய திருமந்திரத்தை உபதேசிக்குமாறு வேண்டுகிறார். இறைவனிடம் அம்பிகை உபதேசம் பெற்ற திருத்தலமாதலின் இவ்வூர் திருமந்திர நகர் என வழங்கப்பட்டது.

## புராணச் சிறப்பு

இத்திருக்கோயிலை காசிப முனிவர், கவுதமர், பரத்துவாசர், அத்திரி போன்ற முனிவர்கள் வணங்கி அருள் பெற்றார்கள் என்று வழிவழியாக தலபுராணச் செய்திகள் கூறுகின்றன. தெய்வீக பயணமாக திருச்செந்தூர் வேலவனை வழிபட வந்த காசிப முனிவர் சோலை மிகுந்த இவ்வூரைக் கண்டு மகிழ்ந்து, இங்கு ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து வழிபாடு நிகழ்த்தினார் என்றும், அதுவே சங்கரராமேசுவரர் கோயில் என்றும் குறிப்பிடுகின்றனர்.

## வரலாற்றுச் சிறப்பு

பாண்டிய மன்னராட்சியின் பிற்கால பாண்டிய மரபில் குறுநில மன்னரான சந்திரசேகர பாண்டியனின் புதல்வரான சங்கரராம பாண்டியன் கயத்தாற்றை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான். மன்னர் குலம் தழைக்க, மனை விளங்க மழலைச் செல்வம் இல்லாது வருந்தினான். மன்னனின் வருத்தத்தைக் கண்ட பெரியோர்கள், காசி போன்ற புண்ணிய திருத்தலங்களுக்கு சென்று புனித நீராடி வருமாறு கூறினர். மன்னன் தனது பரிவாரங்களுடன் புனித நீராட செல்லும்போது, இறைவனது குரல் அசரீரியாக, 'வேந்தே நீ, திருமந்திர நகரில் உள்ள வாஞ்சா புட்கரணி என்ற தீர்த்தத்தில் நீராடி, அங்குள்ள சிவலிங்கத்தை வழிபட்டு வா' என ஒலித்தது. மன்னன் தீர்த்தத்தில் நீராடியவுடன் அசரீரி மீண்டும், 'அரசே காசிப முனிவரால் ஸ்தாபனம் செய்து, பூசிக்கப்பட்ட

சிவலிங்க பெருமானுக்கு திருக்கோயில் எழுப்புவாயாக' என்று கூறியது. இறைவனின் கட்டளைக்கு ஏற்ப மன்னரால் இத்திருக்கோயில் கட்டப்பட்டது.

### தனிச் சிறப்பு

இத்திருக்கோயிலில் உள்ள 'வாஞ்சா புஷ்கரணி' என்ற தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டு வந்தால் பிள்ளை பேறு கிடைக்கும் என்பது ஐதீகம். பிள்ளைப்பேறு வேண்டுவோர் இங்கு வந்து வழிபட்டால் குழந்தை வரம் தரும் அற்புதத் திருத்தலமாக இவ்வாலயம் விளங்குகிறது.

### திருவிழாக்கள்

1. **சித்திரை** - 10 நாட்கள் நடைபெறும் திருவிழா. 10ம் திருநாள் அன்று சுவாமிக்கும், அம்மனுக்கும் என இரண்டு தேர்களுடன் தேரோட்டம் நடைபெறும்.
2. **வைகாசி** – சண்முகர் புஷ்பாஞ்சலி.
3. **புரட்டாசி** - 9 நாட்களும் நவராத்திரி விழா மற்றும் பாரிவேட்டைத் திருவிழா.
4. **ஐப்பசி** – திருக்கல்யாண திருவிழா 10 நாட்கள்.
5. **கார்த்திகை** – திருக்கார்த்திகை சொக்கபனை ஏற்றுதல்.
6. **மார்கழி** - அதிகாலை 3.00 மணிக்கு நடை திறந்து திருப்பள்ளி எழுச்சி வழிபாடு மற்றும் திருவாதிரை திருவிழா.
7. **தை** – தைப்பூசம் தெப்பத்தேர் திருவிழா.
8. **மாசி** – மகாசிவராத்திரி திருவிழா.
9. **பங்குனி** - காரைக்கால் அம்மையார் சிவபெருமானிடம் மாங்கனி பெற்ற நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறும்.

### நடை திறப்பு

காலை 5.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் 9.30 மணி வரையிலும்.

### பூஜை நேரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவனந்தல் | - | காலை 5.30 மணி |
| 2. | விளா பூஜை | - | காலை 8.00 மணி |

| | | | |
|---|---|---|---|
| 3. | உச்சிகாலம் | - | மதியம் 12.00 மணி |
| 4. | சாயரட்சை | - | மாலை 6.00 மணி |
| 5. | அர்த்தசாமம் | - | இரவு 8.30 மணி |

### அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட அன்னதானத் திட்டம் 2003-ம் வருடம் தொடங்கப்பட்டு அன்றுமுதல் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. தினசரி மதியம் 12.30 மணி அளவில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. அன்னதானத்திற்கு நன்கொடை வழங்குவோர்க்கு 80-G பிரிவின் கீழ் வருமானவரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

### அமைவிடம்

தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்தில் இருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலும், புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

### போக்குவரத்து வசதி

தூத்துக்குடி நகர் பேருந்து மற்றும் இரயில் மூலம் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது. அருகில் விமான நிலையம் மற்றும் துறைமுகம் உள்ளது.

### தங்கும் வசதி

தூத்துக்குடி நகரில் ஏராளமான தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன.

